# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**பிரிவு:** TNPSC Group VIIB & VIII **தேர்வு**

**பாடம் : இந்து மதம்**

**பகுதி:** **<u>மந்திரம்</u>**


**காப்புரிமை**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி** VIIB & VIII **தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது**

**எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்**

**ஆணையர்**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# மந்திரம்

- மனனம் செய்பவனை திராணனம் செய்வது அல்லது இரட்சிப்பது மந்திரமாகும்

## மந்திரங்களின் மகத்துவம்

- மந்திரத்தை ஜபிக்க மந்திரத்திற்குரியதேவதை ஜபிப்பவன் முன் தோன்றுகிறது என்பதை பாரிஸ் நகர விஞ்ஞானி ஒருவர் மெய்ப்பித்திருக்கிறார்
- மந்திரத்தால் யானை முதலிய மிருகங்களும் பாம்பு முதலிய விஷ ஜந்துக்களும்கட்டுப்படுகின்றன
- சைவ சமயாச்சாரியார்களும்ஆழ்வார்களும்முறையே பஞ்சாக்கர அட்டாட்சர மந்திரங்களை நவின்று செயற்கரிய செயல்கள் பலவற்றைச் செய்திருக்கிறார்கள்

## மூல மந்திரங்கள்

- சிவன் மூலமந்திரம் - ஓம் நமசிவாய
- விஷ்ணு மூலமந்திரம் - ஓம் நமோ நாராயணாய
- தேவி மூலமந்திரம் - ஓம் உமா தேவ்யை நம:
- கணபதி மூலமந்திரம் - ஓம் கணபதயே நம:
- சுப்பிரமணியார்மூலமந்திரம் - ஓம் சரவண பவாய நம:
- சாஸ்தா மூலமந்திரம் - ஓம் சாஸ்த்ரு மூர்த்தியே நம:

# மந்திர ஜபமுறை

- ஜபம் மூன்று வகைப்படும். அவை மானஸம், மந்தம், வாசகம் ஆகும்.
- மனதிற்குள் ஜபிப்பது மானஸமாகும்.
- தனக்கு மட்டும் கேட்கும் வண்ணம் மெல்ல உச்சரிப்பது மந்தமாகும்.
- பிறர் அறிய உச்சரிப்பதுவாசகமாகும்
- மனதிற்குள் உச்சரிப்பதுஉத்தமம். மெல்ல உச்சரிப்பதுமத்யமம். பிறர் அறிய உச்சரிப்பதுஅதமமாகும்.

## பஞ்சாக்கரம்

- பஞ்சாக்கரம் "ஓம் நமச்சிவாய" என்பதாகும் சிவாய- சிவனுக்கு நம-வணக்கம் சிவனுக்கு வணக்கம் எனப் பொதுவாகக் கூறுவர்
- இறைவன் உயிர்களின் மலத்தை ஒழித்து அருளால் ஆட்கொள்வதைஇம்மந்திரம் உணர்த்துகின்றது
- "அம்மையப்பரே உங்களை நான் வணங்குகிறேன் என்னைப் பற்றி நிற்கின்ற ஆணவத்தையும் மறைத்தலையும் நீக்கி உமது அருளால் ஆட்கொண்டு அருள் புரிதல் வேண்டும்" என்பது பஞ்சாக்கரத்தின்திரண்ட பொருளாகும்
- பஞ்சாக்கரம் நடுவேதமாகிய யஜுர் வேதத்தில் உள்ள ஏழு காண்டங்களில் நடுக்காண்டத்தில் நடுசம்ஹிதையில், ருத்ராத்யாயத்தில் நடுநாயகமாகக் கூறப்படுவதால் வேதம் அனைத்தும் பஞ்சாக்கரமயம்எனக் கூறலாம்

- வேதப் பொருளாகிய சிவபெருமானுக்குச் சிரம் போன்று விளங்கும் யஜுர்வேதத்தில் முகம் போன்று விளங்குவது ருத்ராத்யாயமாகும் அதன் கண்மணி போன்று "சிவ" எனும் இரண்டமுத்துக்கள்விளங்குகின்றன
- பதினெட்டு வித்யைகளிலும் சுருதியே சிறந்தது அதனினும் சிறந்தது பஞ்சாக்கரமாகும் அதனினும் அதனுள் விளங்கும் 'சிவ' எனும் எழுத்துகள் மிகச் சிறந்தனவாகும் என பிரமணங்கள்கூறுகின்றன

## ஐந்து முகங்களும், பஞ்சாக்கர விளக்கமும்

| முகங்கள் | எழுத்துகள் | சித்திகள் | உச்சரிக்க வேண்டிய எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஈசானமுகம் | நகரம் | உச்சாடனம் | இருபத்தைந்து முறை |
| தத்புருடம் | மகரம் | வித்வேடணம் | இருபத்தைந்து முறை |
| அகோரம் | சிகரம் | ஸ்தம்பனம் | இருபத்தைந்து முறை |
| வாமம் | வகரம் | பேதனம் | இருபத்தைந்து முறை |
| சத்யோஜாதம் | யகரம் | மாரணம் | இருபத்தைந்து முறை |

# பஞ்சாக்கரமும் பிரணவமும்

- பஞ்சாக்கரம் பிரணவத்தின் உள்ளுறுப்பாகும் பஞ்சாக்கரமே பிரணவம் பிரணவமே பஞ்சாக்கரமாகும்
- ஸ்தூல பஞ்சாக்கரம் சூட்சம, காரண மகாகாரண மகாமநு என ஐந்து வகைப்படும்

## ஸ்தூல பஞ்சாக்கரம்:

- ஸ்தூல பஞ்சாக்கரத்தில் நகரம் முதலாகவும் யகரம் இறுதியாகவும் உள்ளது சம்பந்தர் அப்பர் சுந்தரர் முதலியோர் "நமசிவாயப்" பதிகம் பாடியுள்ளனர்
- ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் நமசிவாயவே எனப் போற்றப்பட்டுள்ளது
- ஸ்தூல பஞ்சாக்கரத்தின்அட்சரங்கள் 'நமசிவாய' மாகும்.
- இப்பஞ்சாக்கரம்இம்மை மறுமைகளில் பயன் அளிக்கும்

| | எழுத்துகள் | பஞ்சபுதங்கள் | அதிதேவதை |
|---|---|---|---|
| 1. | நகாரம் | பிருதிவி | இராமன் |
| 2. | மகாரம் | அப்பு | விஷ்ணு |
| 3. | சிகாரம் | தேயு | சிவன் |
| 4. | வகாரம் | வாயு | மகேசுவரன் |
| 5. | யகாரம் | ஆகாரம் | சதாசிவம் |

## சூட்சம பஞ்சாக்கரம்:

- சூட்சம பஞ்சாக்கரம்சிவாய நம என்பதாகும்
- இப்பஞ்சாக்கரத்தின் பயன் மலத்தை நாசம் பண்ணும்

## காரண பஞ்சாக்கரம்:

- காரண பஞ்சாக்கரத்தை“சிவாய” என்றும் “சிவாய சிவ” என்றும் கூறுவர்

## மகாகாரண பஞ்சாக்கரம்:

- ’சிவ’ எனும் இரண்டழுத்துக்களைக் கொண்டது இந்த மகாகாரணபஞ்சாக்கரம்

## மகாமநு:

- இந்த ’சி’ எனும் எழுத்தில் ச், வரிவடிவு, அ, பிரணவாட்சர மூலமாகும் இ, அம்மூலத்தை விளக்கும் பூரணமாகும்
- இம்மூன்றின் தோற்றமும் அசைவும் விந்தாகும் இதன் ஒலியே நாதம் இவ்வைந்தும் சேர்ந்ததே ’சி’ எனும் எழுத்தாகும் இதுகாறும் கூறிய விளக்கங்களால் பஞ்சாக்கரத்தின்மகிமை இனிது விளங்கும்

## அட்டாக்கரம்:

- விஷ்ணுகாயத்திரியில் புகழப்பெற்ற நாராயணமந்திரத்தில் வாஸுதேவாய நாராயணாய விஷ்ணு எனும் மூன்றில் முக்கியமானது நாராயண மந்திரமாகும் அதனை 'ஓம் நமோ நாராயணாய' என உச்சரிப்பர் இதனை அட்டாக்கரம்
- இந்த மந்திரத்தை ஜபித்தால் சகல பாக்கியங்களும் கிடைக்கும் நாராயணரது சௌலப்பிய குணங்கள் நம்மில் பிரகாசிக்கும்
- இது ஒரு மங்கல நூல் போன்றது மூன்று சரடாய் ஒரு மங்கல சூத்திரம் போல் எட்டு எழுத்துக்களால் மூன்று பதங்களாலாகியது
- எட்டு அட்சரங்கள் ஓம்,ந,ம,நா,ரா,ய,ணா,ய என்பனவாகும் ஓம் (பிரணவத்தை முதலில் உச்சரித்தும் நம என்ற பதத்தை இரண்டாவதாகவும் நாராயணாய என்ற பதத்தை அதன் பின்னரும் உச்சரிக்க வேண்டும்

## காயத்திரி மந்திரம்:

- காலை மாலைகளில் சந்தியாவந்தனம் செய்து முடித்ததும், காயத்திரி மந்திரம் ஜபிக்க வேண்டும்
- காலையில் சூர்யோதயத்துக்கு முன்னும், மாலையில் சூர்யஸ்தமன வேளையிலும் பிராணாயாம நியமத்தோடு காயத்திரியை ஜபிக்க வேண்டும்

- காயத்திரி மந்திர ஜபத்தால் பாபங்கள் அழியும் சஞ்சிதம், பிராரப்தம் ஆகாமியம் எனும் வினைகள் ஒழியும் விதேககைவல்யபதவி கிடைக்கும்
- இம்மந்திரத்தில் இருபத்துநான்கு எழுத்துக்கள் உண்டு. அவை எல்லாத் தேவர்களையும் சுட்டி நிற்பதால் இம்மந்திரஜபம் எல்லாத் தேவதைகளுடைய அருளைப் பெறுவதற்கும் உரியதாயுள்ளது

" ஓம் பூர், புவஸ்ஸுவ, தத்ஸவிதுர் வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி தியோயோந பிரசோதயாத்"

<u>காயத்திரி மந்திர விளக்கம்:</u>

ஓம் என்ற பிரணவம் அ+உ+ம் எனப்பிரித்துஸ்திதி, இலய, சிருட்டியைக் குறிக்கிறது இறைவனை சிருட்டி, ஸ்திதி, இலயகாரணனாக இது காட்டுகிறது உலகின் ஆதி அந்த நாதனாகவும்இது விளக்கிக் காட்டுகிறது பூ ;- பூமி, புவ ;- ஆகாசம் ஸுவ ;- தத்பரமான இடம். இந்த மூன்றும் சேர்ந்து உலகங்களைக் குறிக்கிறது பூ ;- எனும் சொல் ஆத்மாவை குறிக்கிறது மூன்றும் சேர்ந்து பிராண ஆத்மாக்களைஉணர்த்துகிறது

தத்ஸவிது தேவஸ்ய அப்பிதாவான இறைவனது எல்லா விதப் பேறுகளையும் வரேண்யம் பர்க்க பெறத் தகுதி வாய்ந்த ஒளியை தீமஹி : நாங்கள் மனத்தில் தியானக்கிறோம் தியோயோந பிரசோதயாத் அப்பேரொளி எங்களுடைய புத்தியை நல்வழியில் போகும்படி பிரேரிப்பதாகுக

------****-----****----